DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 311/2021 DW : 1

Name : ராஜேஸ்வரி Age –

W/o : தர்மலிங்கம் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 13.11.2025.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) என் தாயார் பணம் வாங்கியுள்ளார் என்று வாதி தாவா தாக்கல் செய்துள்ளார். நான் இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்துளளேன். அதன் விவரம் ஓரளவு தெரியும். நான் சொல்லி தான் வழக்கிஞர் தாக்கல் செய்துள்ளார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். என் தாயார் திருவாலங்காட்டில் வசித்து வந்தார். கொரணா காலகட்டததில் சென்னை அரசு மருத்துவனையில் காலமானர். எங்கள் சொந்த ஊர் சோளிங்கர். வியாபாரம் செயவதற்காக என் தாயார் திருவாலங்காட்டில் வசித்து வந்தார். திருவாலங்காட்டில் வாதி வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தார். அதற்கு வாடகை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளசொத்தின் பத்திரம் என் தாயாரின் பெயரில் உள்ளது நாங்கள் அனைவரும் சம்பாதித்து தான் அந்த சொத்தை வாங்கினோம். இந்த விபரத்தை நான் என்னுடைய பதிலுரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் தயாருக்கு நான் ஒரே வாரிசு என்றால் சரிதான். என் தந்தை நான் சிறு வயது இருக்கும் போது வேறு ஒருவரை திருமணம் செய்து சென்று விட்டார்.

2) என் தாயார் அசல் பத்திரத்தை வைத்து கொள்கிறேன் என்று சொன்னால் நாங்கள் அசல் பத்திரத்தை நாங்கள் கொடுத்துவிட்டோம். என்

தாயார் இறந்த பின்பு தான் வா.சா.ஆ.1 பற்றிய விபரம் எனக்கு தெரியவந்தது. அதன் பின் தான் நான் முதல் முதலில் வாதியை பார்த்தேன் என்றால் நாங்கள் என் தாயார் அங்கு வசித்து வந்ததால் வாதியின் வீட்டிற்கு ஏற்கனவே சென்றுள்ளோம். அந்த வீட்டில் என் தாயார் 1 1/2ஆண்டுகள் தான் குடியிருந்தார். என் தாயார் அவருடைய தேவைக்காக பணம் பெற்றார் என்றால் சரியல்ல. என் தாயார் உயிருடன் இருந்த வரை சென்று பார்த்தில்லை என்றால் தவறு. திருவாலங்காட்டில் எங்களுக்கு வேறு உறவினர் கிடையாது. வா.சா.ஆ.1 சம்மந்தமாக நான் திருவாலங்காட்டில் வேறு யாரையும் விசாரணை செய்யவில்லை. என் தயார் சொல்லாததால் அவர் வா.சா.ஆ.1 –ஐ வாங்கவில்லை சொல்கிறேன் என்று சொன்னால் எங்களுக்கு கடன் வாங்க வேண்டிய எந்த அவசியம் இல்லாததால் தான் நான் சொல்கிறேன். தாவா பாண்டில் சாட்சி கையெழுத்து போட்டவர்களை விசாரணை செய்யவில்லை. என் தயார் உயிருடன் இருந்த வரை அவருக்கும் வாதிக்கும் எந்த வித பிரச்சனை இருந்தது கிடையாது என்றால் சரிதான்.

3) நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணம் வாதியின் வீட்டில் நாங்கள் எங்கள் போனில் எடுத்த ஆவணமாகும். அப்போது தான் வா.சா.ஆ.1 பற்றி விபரம் தெரியவந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் நான் போனில் எடுத்தேன் என்ற விபரம் என்னுடைய வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றாலும், அதற்கு அதை நிருப்பிக்கும் பொருட்டு நான் எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், என் தாயார் என்னிடம் கொடுத்த ஆவணத்தை தான் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூடுதலாக எழுதப்பட்ட விபரம்காவல் நிலையத்தில் அவர்கள் அந்த ஆவணத்தை எடுத்து வரும் போது தான் எங்களுக்கு தெரியவந்தது. அதை அவர்கள் பின்னிட்டு தான் அவர் எழுதியுள்ளார்கள். அதனால் நான் என்னுடைய

பதிலுரையில் வா.சா.ஆ.1–ல் குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய் என்று சொல்லியுள்ளேன். என் தயார் காய்கறி வியாபாரம் செய்து வந்தார். என் தயார் கந்து வட்டி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சொன்னால் தவறு. இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்த அசல் பத்திரங்களை திரும்ப கேட்டு நான் மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழககில் என் தாயாருடைய வாரிசு மற்றும் இறப்பு சான்றும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கொடுக்கவேண்டிய கடனை திரும்ப செலுத்தாதால் தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்து மீது Charge ஏற்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல. என் தயார் ஏற்பட்ட கடனுக்கு நான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. என் தாயார் என்னுடன் சுமுகமாக இல்லாததால் தான் அவர் தனியாக திருவாலங்காட்டில் வசித்து வந்தார் என்று சொன்னால் அது தவறு.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM

Digitally signed by S TASNEEM
Date: 2025.11.13 17:49:21 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.